(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 23.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஒகத்து 21, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0060 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுனாமியின் காரணமாக இறந்தவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) சுனாமியின் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதை மாவட்ட அடிப்படையிலும்,

(iii) அரசாங்கத்தினால் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(iv) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் மீளக் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதை மாவட்ட அடிப்படையிலும்,

(v) 2005 சனவரி 01 முதல் இற்றை வரை ஒரு நாடு என்ற முறையில் குறிப்பாக சுனாமியின் நிமித்தம் நாம் பெற்றுக்கொண்ட மொத்த நன்கொடைகள், உதவிகள் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0080 / ' 09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்மலானை பழைய உணவுக் களஞ்சிய காணியிலுள்ள கட்டிடத்தில் அமைக்கப்பட்ட பொருளாதார நிலையத்தை அமைப்பதற்காக செலவிடப் பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவு,

(ii) அவ்வாறு செலவிடப்பட்ட பணத் தொகை அந்தந்தப் பிரிவுகளின் கீழ் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பழைய உணவுக் களஞ்சிய கட்டிடத்திற்காகப் புதிதாகச் சேர்க்கப்பட்ட பிரிவுகள் யாவை,

(ii) பழைய கட்டிடத்தின் பகுதிகள் அகற்றப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறு அகற்றப்பட்டிருந்தால், இரும்பு உள்ளிட்ட ஏனைய பாகங்களுக்கு என்ன நடந்தது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0189 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இற்றைவரை வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் இந்நாட்டுத் துறைமுகங்களின் ஊடாக கொண்டுவரப்பட்ட மூன்றாம் தர மீன்களின் தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் கொண்டுவரப்பட்ட மூன்றாம் தர மீன்களில் கடற்றொழில் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த தொகை யாது,

(ii) அதன் பெறுமதி எவ்வளவு,

(iii) வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளிலிருந்து இவ்வாறு கொள்வனவு செய்த ஒரு கிலோகிறாம் மீனின் விலை யாது,

(iv) மேற்படி ஒரு கிலோகிறாம் மீனின் விற்பனை விலை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0289 / '09

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான திட்டப்பட இலக்கம் 11, உகுவெல பிரதேச செயலாளர் பிரிவின் ரத்வத்தை - கட்டுதெனியவத்தை எனும் காணி, கே. டீ. செனவிரத்ன என்பவருக்கு மதிப்பிடப்பட்டதொரு பணத்தொகைக்கேற்ப சட்ட ரீதியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. செனவிரத்னவிற்குச் சொந்தமான இக்காணிக்குரிய நுழைவுப் பாதையை அமைத்துக்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த காணிப் பகுதியில் பிரதேச சபையினால் நீர் தாங்கியொன்று அமைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) இதன் காரணமாக இப்பாதையை பயன்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்துள்ள தென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) தற்போது சனசமூக நிலையத்திற்கும் சுகாதார நிலையத்திற்கும் இடையேயுள்ள ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிப்பகுதியை திரு. செனவிரத்னவிற்கு மாற்று வழியாக பயன்படுத்துவதற்கு பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0401 / '09

5.

கௌரவ கே.வீ. சமந்த வித்தியாரத்ன,—நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா கருத்திட்டத்தின் வேலைகளை ஆரம்பித்து அடிக்கல் எப்போது நாட்டப்பட்டதென்பதையும்,

(ii) உமா ஓயா கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற பிரதான நிர்மாணிப்புகள் யாவையென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உமா ஓயா கருத்திட்டத்தின் அங்குரார்பண விழாவுக்காக மேற் கொள்ளப்பட்ட மொத்தச் செலவு, ஒவ்வொரு பணிக்கேற்ப வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) அங்குரார்பண விழாவுக்காக ஒதுக்கீடுகள் எவ்வாறு பெறப்பட்டன என்பதையும்,

(iii) இக்கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இப்பணத்தொகையை பெற்றுக்கொள்ளவுள்ள முறை யாதென்பதையும்,

(v) தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) உரிய கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0510 / '09

6.

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— விஞ்ஞான, தொழிட்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005,2006,2007,2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் வரவுசெலவு திட்டத்தின் மூலம் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இதில் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்கான பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் ஒதுக்கப்பட்ட மற்றும் கிடைத்த பணத்தொகைக்களுக்கிடையே ஏதேனும் வித்தியாசம் நிலவுகின்றதா என்பதையும்,

(iv) ஆமெனில், வருடாந்த ரீதியில் இது எவ்வளவென்பதையும்,

(v) இப்பணத்தொகை குறைவடைந்துள்ளதாயின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விஞ்ஞான, தொழிட்நுட்பவியல் அமைச்சின் கீழுள்ள பிரதானமான நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி பிரதானமான நிறுவனங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0516 / '09

7.

கௌரவ ஜயந்த விஜேசேகர,—கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் இல்லாத பாடசாலை களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0081/ '09

8.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நிருவாக சேவையில் II / II ஆந் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2004/2005 என போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டதா,

(ii) ஆமெனில், எத்தேதியில்,

(iii) தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் நிரப்பப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையும் எவ்வளவு,

(v) ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு எவ்வளவு,

(vi) ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு எஞ்சியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நியமனங்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மற்றும் சேவையை விட்டு விலகியவர்களால் ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு இரண்டாம் சுற்றுக்கு விண்ணப்பதாரிகளை அழைக்க நடவடிக்கை எடுக்காமைக்கு காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0222 / '09

9.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை வங்கியின் கொழும்பு டப்ரோபென் கிளையில் பேணப்படும் திறைசேரி கணக்கின் வங்கி மேலதிகப்பற்று 2005 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி, 2008 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி மற்றும் 2009 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வங்கி மேலதிகப்பற்று இவ்வளவு அதிகரிப்பதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) வங்கி மேலதிகப் பற்று அதிகரிப்பதை தடுப்பதற்கு இதுவரை எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0292 / '09

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 10 வருடங்களுக்கான,

(i) இலங்கைக்கு வருகை தந்த உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் நாடுகள், அவர்கள் இங்கு தங்கியிருந்த சராசரி காலம் ஆகியவற்றையும்,

(iii) ஈட்டப்பட்ட சராசரித் தொகையையும், செலவு செய்யப்பட்ட சராசரிச் செலவுத் தொகையையும்

வருட வாரியாக அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 10 வருடங்களாக உல்லாசப் பயணத்துறையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டிருந்த ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இற்றைவரை கடந்த 10 வருடங்களில்,

(i) நாட்டில் இருந்த ஹொட்டல் அறைகளின் எண்ணிக்கையையும்,

(ii) ஹொட்டல்கள் சார்ந்திருந்த நட்சத்திர வகைப் பிரிவுகளையும்

வருடவாரியாக அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0442 / '09

11.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 வரை ஒவ்வொரு வருடத்திலும் யூன் 30 ஆம் திகதியன்று மாத்தளை மாவட்டத்தில் தம்புல்ல தேர்தல் தொகுதியில் இருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவர்கள் பெற்ற நிதித் தொகையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட குடும்பங்கள் சாரும் குழுக்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி பெறுநர் மத்தியில் வறுமை குறைந்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0517/ '09

12.

கௌரவ ஜயந்த விஜேசேகர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டுக்காக கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒதுக்கப்பட்ட தொகையில் திருகோணமலை மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒதுக்கப்பட்ட தொகையில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0085 / '09

13.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுயாதீன (ஐ.ரீ.என்.) தொலைக்காட்சி நிறுவனத்தினால் ஒலிபரப்பப்படுகின்ற "துலாவ" அரசியல் நிகழ்ச்சி 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஏப்பிரல் 30 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் மொத்தமாக எத்தனை தடவைகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன என்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சியில் கலந்துரையாடல்களின் பொருட்டு குறிப்பிட்ட காலகட்டத்தில் பங்குபெறச் செய்துள்ள அரசியல் பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) உத்தியோகத்தர் மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) ஏனைய துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) குறிப்பிட்ட காலகட்டத்தில் அரசியல் கட்சி ரீதியாக பங்குபற்றியுள்ள அரசியல் பிரதிநிதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) ஆகக் கூடுதலான தடவைகள் பங்குபற்றியவர்களின் அடிப்படையில், நபர்கள் ரீதியாக எத்தனை தடவைகள் நிகழ்ச்சிகளை பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளனர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

0294 / '09

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009, மே, 15 இற்கு முன்பு ஒவ்வொரு நாடும் தனது கடற்படுகை உரிமை தொடர்பாக உரிமைக் கோரிக்கையை விடுக்க வேண்டுமென்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறு இவ்அமைச்சு செய்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) ஆம் எனில், சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்பிற்கு சமர்ப்பித்த கோரிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) புதிதாக உரிமைக்கோரிக்கை விடுக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர் என்பதையும்,

(ii) ஐக்கிய நாடுகள் சபை அல்லது பொருத்தமான உலக அமைப்பினால் உத்தியோகபூர்வமாக அது அங்கீகரிக்கப்படும் திகதி என்ன என்பதையம்,

அவர் மேலும் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 2.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

2.

வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

3.

செரண்டிப் கல்வி நம்பிக்கை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

4.

சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

5.

எதிர்கால உலக ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

*6.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*10.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*28.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*29.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

30.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

கிராஸ்ரூட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0443 / ’09

1.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 வரை ஒவ்வொரு வருடத்திலும் யூன் 30 ஆம் திகதியன்று மாத்தளை மாவட்டத்தில் ரத்தொட்ட தேர்தல் தொகுதியில் இருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவர்கள் பெற்ற நிதித் தொகையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட குடும்பங்கள் சாரும் குழுக்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி பெறுநர் மத்தியில் வறுமை குறைந்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0444 / ’09

2.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 வரை ஒவ்வொரு வருடத்திலும் யூன் 30 ஆம் திகதியன்று மாத்தளை மாவட்டத்தில் லக்கல தேர்தல் தொகுதியில் இருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவர்கள் பெற்ற நிதித் தொகையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட குடும்பங்கள் சாரும் குழுக்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி பெறுநர் மத்தியில் வறுமை குறைந்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?